**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.118/2022**

**PW9**

| | | |
|---|---|---|
| **Name** | : | ஆறுச்சாமி |
| **Father's Name** | : | மாசிலாமணி |
| **Village** | : | புதுப்பாளையம் |
| **Taluk/District** | : | செங்கம் |
| **Caste** | : | ---------- |
| **Calling** | : | |
| **Religion** | : | ---------- |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.03.2026.
A1,2 , 4 to 7 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுப்பாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன வெங்கடேசனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வெங்கடேசன் இறந்து பற்றி அவர் இறந்த மறுநாள் எனக்கு தெரியும். தேதி ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 17.09.2021 அன்று இரவு 9.30 மணியளவில் இறந்துபோன வெங்கடேசன் என்பவர் தருமாவுடன் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிந்தார் என்றும், அவருக்கு் பின்னால் நானும் மணி, ஸ்ரீராமன் என்பவரும் வந்துகொண்டிருந்தோம் என்றும், புதுப்பாளையம் மெயின்ரோடு TNCC குடோன் அருகே உள்ள கல்லாற்று ஓடை தரைப்பாளத்தின் அருகே வந்து கொண்டிருந்தபோது பொலிரோ பிக் அப் வேன் TN25BM4194 வாகனத்தை நிறுத்திவைத்து அதற்கு பக்கத்தில் ஆஜர் எதிரிகள் விஜி மற்றும் சுரேஷ் நின்று

கொண்டிருந்தார்கள் என்றும், அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த ஆஜர் எதிரிகள் வினோத் , ஏழுமலை ஆகியோர் எங்களை வழிமறித்து நிறுத்தினார்கள் என்றும் , அதனால் நாங்கள் தப்பி ஓடி புதர் மறைவில் மறைந்திருந்து பார்த்தோம் என்றும், வெங்கடேசன் என்பவர் கால் தடுமாறி கீழே விழுந்தவுடன் ஆஜர் எதிரிகள் மதி, வினோத், சுரேஷ் ஆகியோர் வீச்சறுவாளை கொண்டு வந்து வெங்கடேசனை ஆபாசமாக பேசி மதி என்பவர் " அன்னைக்கு என் கையை வெட்டினே அதனால் எனக்கு கை இல்லை உன்னை இன்னைக்கு வெட்டி சாய்த்தால்தான் என் ஆதங்கம் அடங்கும் " என்று கூறி அவரிடம் இருந்த வீச்சறிவாளால் வெங்கடேசனின் முன்பக்க தலை, வலதுபக்க கழுத்து, வலது தோள் பட்டை ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும், சுரேஷ் வீச்சறிவாளால் வெங்கடேசனின் இடது கால் மற்றும் வலது கால் ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும், வசந்த் என்பவர் அறிவாளால் வெங்கடேசனின் வலது மற்றும் இடது தோள் பட்டைகள், முழங்கை ஆகிய இடங்களில் வெட்டினார்என்றும், உடனிருந்த ஏழுமலை , வினோத், வல்லரசு ஆகியோர்வெங்கடேசனை விட்டுவிடாமல் வழிமறித்து நின்றார்கள் என்றும் நேரில் அதை பார்த்த நான் வெங்கடேசனின் தந்தை முருகன் மற்றும் வெங்கடேசனின் மனைவி ஆகியோருக்கு தகவல் சொன்னோம் என்றும் 108 ஆம்புலன்ஸ் மூலம் வெங்கடேசனை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும் வழியி'லேயே அவர் இறந்துவிட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.